# வெப்பத்தால் குளிரும் உலகம்!

# புதிய வியாதிகளை உருவாக்கும் இயற்கை

உலகம் வெப்பமாகி வருவதாக உலகம் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், கடந்த சில நாட்களாக உலகின் பல நாடுகளையும் குளிர்வாட்டி வதைத்திருக்கின்றது. ஆனால், இந்தக் குளிருக்கும் காரணம் வெப்பம்தான் என்கின்றனர் புவியில் வல்லுனர்கள். பூமி வெப்பத்தால் குளிர்ந்து கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். புவி வெப்பமாகி வருகிறது என்பதன் எதிரொலிதான் தற்போது வாட்டி வதைக்கும் குளிர். இந்த குளிருக்கு காரணம் துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகி வருவதுதான். இதனால் உலகம் முழுவதும் தற்போது அதிக குளிர் நிலவுகிறது. வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா பகுதிகளில் நம்ப முடியாத அளவுக்கு குளிர் வாட்டி எடுக்கிறது. குறிப்பாக அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன், ப்ளா நகரங்களில் 28 பாகை செல்சியஸ் வெப்பநிலைதான் உள்ளது. இது மனிதனின் சராசரி வெப்பநிலையைவிட குறைவாகும்.

ஆர்ட்டிக் கடல் பகுதியில் பனிப்பாறைகள் எதிர்த்திசையில் நகர்ந்து வேகமாக உருகி வருகின்றன. இதுதான் தற்போதைய கடுங்குளிருக்கும் காரணம். ஒவ்வொரு ஆண்டும் கணிக்க முடியாத அளவுக்கு மாற்றங்கள் நிகழ்ந்து வருவதாக கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வுக்குழு கூறுகிறது.

கொலரோடா பகுதியில் –10 பாகை அளவுக்கு குளிர் நிலவுகிறது. இதற்கு முன்பாக 1899ம் ஆண்டு அமெரிக்காவின் மேற்கு கடற்கரை பகுதியில் –10 பாகைக்கு கீழாக வெப்பநிலை சென்றிருக்கிறது என்று ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இவை பனிப்பாறைகள் உருகுவதால் ஏற்பட்டுள்ள நிலைமை என்கின்றார்கள்.

இதேவேளை, புவி வெப்பமாதலால் இன்னொரு பாரிய பிரச்சினையும் ஏற்படுகின்றது. அதாவது திடீர் திடீரென்று புதிய வியாதிகள் பரவி மனிதர்களையும் உயிரினங்களையும் அழிக்கும் என்று எச்சரிக்கின்றார்கள் விஞ்ஞானிகள். சமீபத்தில் பரவி வரும் பன்றிக் காய்ச்சல் மற்றும் திடீர் கிருமிக் (வைரஸ்) காய்ச்சல்கள் இந்த பருவமாற்றத்தால் ஏற்பட்டவைதான் என்கிறார்கள்.

உலகம் வெப்பமாகி வருவதால் நம்மைப்போலவே மற்ற உயிரினங்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால் புதிய புதிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. இதனால் கணிக்க முடியாத புதிய புதிய வியாதிகள் விலங்கில் இருந்து மனிதனுக்குப் பரவுகின்றன. கடந்த நூற்றாண்டில் இதுபோன்ற காலமாற்றத்தால்தான் உயிர்க்கொல்லி நோயான பால்வினை (எயிட்ஸ்) பரவியது. மேற்கு ஆப்பிரிக்காவில் சிம்பன்சி குரங்குகளில் இருந்து எச்.ஐ.வி. கிருமி மனிதர்களுக்கு பரவி இருப்பதாக கூறப்பட்டது. இதனால் இதுவரை இரண்டரைக் கோடி மக்கள் பால்வினை நோயால் இறந்துள்ளனர் என்று புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

அதேபோல கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவின் மெக்சிகோ மாகாணத்தில் பன்றிகளில் இருந்து 'ஸ்வைன் புளு' எனப்படும் பன்றிக் காய்ச்சல் பரவி உலகம் முழுவதையும் இன்றுவரை ஆட்டிப்படைத்து வருகின்றது. பறவைகளில் இருந்தும் வித்தியாசமான பாதிப்புகளை உருவாக்கும் வியாதிகள் ஏற்கனவே பரவியுள்ளன. 1960ல் இருந்து சுமார் 300 வியாதிகள் புதிதாக இனம் காணப்பட்டு உள்ளன. இவற்றில் 60 சதவீத வியாதிகள் விலங்குகளில் இருந்து மனிதனுக்குப் பரவியவை.

தற்போது வேகமாக மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, இன்னும் பல வியாதிகள் மனிதனுக்கு பரவும் என்று எச்சரிக்கப்படுகின்றது. குறிப்பாக மலேரியா, லைம் டிசீஸ், எலிகளில் இருந்து ஹான்டா வைரஸ், கொசுக்கள் மூலம் வெஸ்ட் நைல் டிசீஸ், நன்னீர் நத்தைகள் மூலம் ஸிஸ்டோசோமைசிஸ் எனும் வியாதிகள் பரவ வாய்ப்புகள் இருக்கின்றன. இவை எதிர்பார்க்கப்படும் வியாதிகளாக பட்டியலிடப்பட்டுள்ளன. இவையின்றி இன்னும் வினோதமான நோய்களும் பரவக்கூடும் என்று அமெரிக்காவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மனைவியின் நெக்லஸ் ஆசையால்

# சவப்பெட்டியில் இருந்து உயிர்த்தெழுந்த கணவன்!



மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறிய இறுதிச் சடங்கின் பின்னர் சவப்பெட்டியில் அடைக்கப்பட்ட ஒருவர் இறுதி விநாடியில் உயிருடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் போலந்து நாட்டில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது. போலந்தின் கடோவிஸ் நகரைச் சேர்ந்தவர் ஜோசப் கூசி (76). தேன் சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வரும் இவருக்கு, சில நாட்களுக்கு முன்பு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயக்கமானார். அவருடைய இரண்டாவது மனைவி லுட்மிளா ஆம்புலன்சை வரவழைத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். மருத்துவமனையில் பரிசோதனை செய்த மருத்துவர், கணனியில் அவரது துடிப்பு குறைந்துகொண்டு சென்று நின்று விட்ட நிலையில், முதியவர் இறந்துவிட்டதாக அறிவித்து மரணச் சான்றிதழும் அளித்துவிட்டார்.

பின்னர், கூசியின் இறுதி சடங்குக்கான வேலைகளில் உறவினர்கள் ஈடுபடத் தொடங்கினர். உடலையும் சவப்பெட்டிக்குள் வைத்து மூடி, இறுதிப் பயணமும் தொடங்கிவிட்டனர். சற்று நேரத்தின் பின்னர் திடீரென மனைவி லுட்மிளா, தனக்கு கணவனின் ஞாபகமாக அவருடைய கழுத்தில் உள்ள 'நெக்லேஸ்' வேண்டும் என கூறியுள்ளார். அவரது விருப்பத்தை தட்டிக்கழிக்க முடியாத நிலையில், பிரேதத்தைப் பொறுப்பேற்று கொண்டு சென்ற நிறுவனத்தினர், மூடிய சவப்பெட்டியை திறந்துவிட்டுள்ளனர். அவரது கழுத்தில் இருந்த நெக்லேசை கழற்ற கூசியின் கழுத்தை லுட்மிளா தொட்டபோது அதிர்ச்சி அடைந்தார். தனது கணவரின் கழுத்தில் நாடித் துடிப்பு இருப்பதாகக் கூறி அலறினார். பின்னர் வேறுசிலரும் அதை உறுதிப்படுத்தினர். உடனடியாக முதியவரை சவப்பெட்டியில் இருந்து வெளியே தூக்கி, முன்பு கொண்டு சென்ற அதே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மருத்துவர்கள் பரிசோதித்தபோது நிமிடத்துக்கு 20 முதல் 30 துடிப்புகள் என்ற அளவில் இருந்து கொண்டிருப்பது தெரியவந்தது. உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் முதியவரைச் சேர்த்தனர் மருத்துவர்கள்.



கூசி வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டி மீண்டும் வாங்கப்பட்ட இடத்திற்கு சென்றடைந்தது

பின்னர் மூன்று நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு தற்போது ஆரோக்கியமாக வீடு திரும்பியுள்ளார் முதியவர். என் உயிரை காப்பாற்றியது மனைவி லுட்மிளா தான் என நன்றியுடன் நினைவுகூர்ந்த முதியவர், ஒரு பானை தேனை அவருக்கு பரிசளித்ததாக மகிழ்ச்சியுடன் கூறினார். முதியவரை முன்னதாக பிரிசோதித்த மருத்துவர், தனது தவறான முடிவுக்கு மன்னிப்பு கோரினார்.

# செல்பேசியுடன் வந்த மாணவிக்கு 90 கசையடிகள்!

பாடசாலைக்கு செல்பேசி கொண்டுவந்த 13 வயதான மாணவி ஒருவருக்கு சவுதி அரேபிய நீதிமன்றம் 90 சவுக்கடியும் 2 மாத சிறை தண்டனையும் விதித்துள்ளது. சவுதியில் பெண்கள் பாடசாலைகளில் கமரா வசதியுள்ள செல்பேசிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதை மீறி கமரா செல்பேசியுடன் பாடசாலைக்கு வந்த மாணவி மீது வழக்கு தொடரப்பட்டது. தவறு செய்த மாணவிக்கு அதே வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் முன்னிலையில் கசையடி கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் அது மற்ற மாணவிகளுக்கும் இதுபோன்ற தவறு செய்யத்தோன்றாது என்று அந்தப் பாடசாலையின் முதல்வர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். இதேவேளை, சவுதி நீதிமன்றத்தின் இந்தக் கொடூரத் தண்டனையை சர்வதேச மன்னிப்புச் சபையும், மனித உரிமைகள் அமைப்பும் கடுமையாகக் கண்டித்துள்ளனர். 13 வயதான மாணவிக்கு இவ்வாறான தண்டனை வழங்கும் தீர்ப்பை ஒரு நீதிமன்றம் அறிவித்திருப்பது குறித்து தமது அதிர்ச்சியை வெளியிட்டிருக்கின்றன. இதேவேளை, மாணவிக்கு மன்னிப்பு வழங்கும் முடிவு தங்கள் கையில் இல்லையென்றும், அதனை சவுதி மன்னரே முடிவு செய்யவேண்டும் எனவும் நீதிபதி ஒருவர் தெரிவித்தாக அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. தற்போது மாணவியின் விவகாரம் மன்னருக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.



# விமானத்தில் இவர்களுக்கு கூடுதல் கட்டணம் – எயார் பிரான்ஸ் புதிய திட்டம்



உடல் பருமனானவர்களுக்கு விமான பயணத்தின் போது ஒரு இருக்கை போதுமானதாக இல்லை. இவ்வாறு உடல் பருத்தவர்கள் விமானத்தில் ஏறிய பின் இரு இருக்கைகள் கோருகின்றனர். இதனால் அவர்களுக்கு என்று தனியாக இரு இருக்கைகள் அடுத்த மாதம் முதல் கொடுக்கப்பட இருக்கின்றன. இந்த வசதி எயார் பிரான்ஸ் விமானத்தில் செய்யப்பட இருக்கிறது. இதற்காக அவர்கள் கிட்டத்தட்ட இரு மடங்கு கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது 2வது இருக்கைக்கான கட்டணத்தில் 75 சதவீதம் செலுத்தப்பட வேண்டும். 2வது இருக்கைக்கான கட்டணத்தில் வரி, கூடுதல் வரி ஆகியவை நீங்கலான கட்டணம் தான் 75 சதவீதம் ஆகும். இந்த தகவலை அந்த விமான நிறுவன பேச்சாளர் மோனிக் மட்சே (Monique Matze) தெரிவித்தார்.